## 2024.04.29 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. இலங்கை - இந்தோனேசியா முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (ISLPTA)

இந்தோனேசியாவுடனான முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக 2023.07.10 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை 2024.03.14 அன்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் மற்றும் இந்தோனேசிய வர்த்தக அமைச்சர்களுக்கு இடையில் இடம்பெற்றுள்ளதுடன், வர்த்தகக் கலந்துரையாடல் குழுவின் முதலாவது கூட்டம் இணையவழி ஊடாக 2024.04.03 மற்றும் 04 ஆம் திகதிகளில் இடம்பெற்றது. குறித்த பேச்சுவார்த்தைக்கு குழுவில் கலந்துரையாடல் பொறிமுறை, குறித்த தரவுப் பரிமாற்றங்கள் செய்யப்படும் கால அட்டவணை, விடயதானம் மற்றும் செயல் எல்லை போன்ற துறைகள் பற்றி இருதரப்புக்கிடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன. குறித்த குழுவின் இரண்டாவது கூட்டம் 2024.06.19 மற்றும் 20 ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்துவதற்கு இதுதரப்பும் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய உத்தேச முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக மேற்கூறப்பட்டவாறு அடைந்துள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த விடயங்களை அமைச்சரவை கருத்தில் கொண்டுள்ளது.

### 02. மிரிஸ்ஸ சமுத்திர வலயத்தை சர்வதேச தரநியமங்களுக்கமைவான நீலக்கொடி (Blue Flag) கடற்கரை வலயமாகவும் சமுத்திர உயிரினங்கள் சரணாலயமாகவும் மாற்றுதல்

மிரிஸ்ஸ சமுத்திர வலயமாகவும், உயிரின சரணாலயமாகவும் பிரகடனப்படுத்துதல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுக்கு 2023.05.22 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதில் குறித்த முன்மொழிவுக்கு ஏற்புடைய அனைத்துத் தரப்பினர்களின் பங்கேற்புடன் மேலதிக விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைக்கு விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக கௌரவ பிரதமர் அவர்களின் தலைமையில் உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த உபகுழுவால் மிரிஸ்ஸ சமுத்திர வலயத்தை சர்வதேச தரநியமங்களுக்கு இணங்க நீலக்கொடி (Blue Flag) கடற்கரை வலயமாகவும் சமுத்திர உயிரினங்கள் சரணாலயமாகவும் மாற்றியமைத்து தென்மாகாண சுற்றுலாப் பொருளாதாரத்தை ஐந்து மடங்கால் அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு, குறித்த விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விதந்துரைகளை விடயதானத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சு மற்றும் நிறுவனங்கள் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கும் கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. காங்கேசன்துறை துறைமுகத்தை மறுசீரமைப்பு செய்யும் கருத்திட்டம்

இந்திய கடன் நிதியுதவியுடன் காங்கேசன்துறை துறைமுகத்தை மறுசீரமைக்கும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2017.05.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், கருத்திட்ட முகாமைத்துவ ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக 2019.12.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆலோசனை சேவை வழங்கும் நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்பட்ட மதிப்பீட்டுச் செலவானது, குறித்த கடன் தொகையை விடவும் அதிகரித்தமையால், கருத்திட்டத்தின் செயற்பாடுகளை எதிர்பார்த்தவாறு முற்னெடுத்துச் செல்வதற்கு முடியாமல் போயுள்ளது. அதனால் அரச – தனியார் பங்குடமை பொறிமுறையின் கீழ் குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அரசுடன் மேலும் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அதன் ஒட்டுமொத்த மதிப்பீட்டுச் செலவையும் நிதியுதவியாக வழங்குவதற்கு இந்திய

அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. குறித்த நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கும், அதற்கான ஏற்புடைய ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இலங்கைக்கும் கசகஸ்தானுக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகள் ஒப்பந்தம்**

இலங்கைக்கும் கசகஸ்தானுக்கும் இடையிலான இருதரப்பு விமான சேவைகளை மேம்படுத்துவதற்காக இருநாடுகளின் விமானப் போக்குவரத்து அதிகாரசபைகளுக்கும் இடையிலான விமான சேவைகள் தொடர்பான ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக 2015.05.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், இதுவரை குறித்த விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு இயலுமை கிட்டவில்லை. உத்தேச விமான சேவைகள் ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையின் எந்தவொரு இடத்திலிருந்தும் கசகஸ்தானின் எஸ்டானா மற்றும்/அல்லது அல்மெட் வரைக்கும் திட்டவட்டமான விமான வழிப்பயணத்தினூடாக வாரத்திற்கு 07 தடவைகள் விமான சேவைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, இருதரப்பினரும் உடன்பாடு எட்டப்பட்டுள்ள விமான சேவைகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் இடம்/நடமாடும் வலயத்தில் தங்க நகைக்கடை (Gold Shop) அமைத்தல்**

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் இடம்/நடமாடும் வலயத்தில் புதிய வர்த்தக வாய்ப்பாக தங்கநகை விற்பனை வியாபாரத்தை அறிமுகப்படுத்துவது பொருத்தமானதெனக் கருதப்படுவதுடன், அதுதொடர்பான முன்மொழிவை வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சமர்ப்பித்துள்ளது. தற்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இவ்வசதிகள் இன்மையால், அதன் புறப்படும் இடம்/நடமாடும் வலயத்தில் ''தங்க நகைக் கடையை'' அமைப்பதற்கு வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி திட்டமிட்டுள்ளது. அதற்கமைய, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் இடம்/நடமாடும் வலயத்தில் தங்க நகைக்கடையை அமைப்பதற்காக பொருத்தமான இயக்குநர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக சர்வதேச போட்டி விலைமுறி முறைமையைக் கடைப்பிடித்து விலைமனுக் கோரலை மேற்கொள்வதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. வரையறுக்கப்பட்ட சீ-நோர் அமைப்புக்கு (CEY-NOR Foundation) சொந்தமான காரைநகர் படகு கட்டும் தளத்தை மறுசீரமைப்பு செய்தல்**

நோர்வே நாட்டின் அரச சார்பற்ற நிறுவனமான NGU இன் நிதியுதவியுடன் 1967 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் காரைநகரில் தாபிக்கப்பட்டுள்ள சீ-நோர் அமைப்பு 1990 ஆம் ஆண்டில் அரச கம்பனியாக மாற்றப்பட்டது. இவ்வமைப்பு கண்ணாடி இழை (Fiberglass) படகுகளைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டது. 1990 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதேசத்தில் நிலவிய சூழ்நிலைகளால் காரைநகர் படகு கட்டும் தளத்தின் இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டில் இப்படகு கட்டும் தளத்தின் மறுசீரமைப்புக்காக 350 மில்லியன் ரூபாய்கள் செலவிட்டிருப்பினும், போதியளவ நிதியின்மையால் எஞ்சிய சிவில் மற்றும் இயந்திரோபகரண நிதியொதுக்கீடு பூர்த்தியடையவில்லை. வரையறுக்கப்பட்ட சீ-நோர் அமைப்புக்குச் சொந்தமான காரைநகர் படகு கட்டும் தளத்தை மறுசீரமைப்பு செய்யும் நடவடிக்கைகளை

பூர்த்தி செய்வதற்கும் மேலும் சில பணிகளுக்காக உயர்ந்தபட்சம் 290 மில்லியன் ரூபாய் நிதியுதவியை வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. இக்கருத்திட்டத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்கத்தின் உடன்பாடு கிடைத்துள்ளது. உத்தேச நிதி வழங்கலைப் பெற்றுக் கொள்வதற்காக இருதரப்பினருக்கும் இடையில் கையொப்பமிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதலும், வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைத்துள்ளது. அதற்கமைய, குறித்த நிதியைப் பெற்றுக்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக கடற்றொழில் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. இராஜதந்திர, கடமைகள் அல்லது சேவைகளுக்கான கடவுச்சீட்டு கொண்டுள்ளவர்களுக்கு வீசா அனுமதியைப் பெறுவதிலிருந்து விடுவிப்பதற்காக றுவன்டாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்

இலங்கைக்கும் றுவன்டாவுக்கும் இடையிலான தொடர்புகளை மேம்படுத்தும் நோக்கில் இருநாடுகளுக்கிடையில் இராஜதந்திர, கடமைகள் அல்லது சேவைகளுக்கான கடவுச்சீட்டு கொண்டுள்ளவர்களுக்கு வீசா அனுமதியைப் பெற்றுக் கொள்வதிலிருந்து விடுவிப்பதற்காக 2019.05.07 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், குறித்த ஒப்பந்தம் இதுவரை கையொப்பமிடப்படவில்லை. இருதரப்பினருக்கு இடையிலான இராஜதந்திர, கடமைகள் அல்லது சேவைகளுக்கான கடவுச்சீட்டு கொண்டுள்ளவர்களுக்கு 30 நாட்களை விஞ்சாத காலப்பகுதிக்கு வீசா அனுமதியைப் பெறுவதிலிருந்து விடுவிப்பதற்காக இலங்கைக்கும் றுவன்டாவுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான வனவியல் நிறுவனத்தின் வளங்களை வனவியல் நிறுவனத்தை (Srilanka Forestry Institute) ஊக்குவிப்பதற்காகப் பயன்படுத்தல்

வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு நடாத்தப்படும் நிரந்த சேவைக்கால பயிற்சிப் பாடநெறிகளுக்கு மேலதிகமாக, இலங்கை வனவியல் நிறுவனத்திடமுள்ள வசதிகளைப் பயன்படுத்தி அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் அவர்களிடம் வனங்கள் தொடர்பான சிறந்த மனப்பாங்கு, அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்ய முடியுமெனக் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கை வனவியல் நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்களை வேறு நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் வழங்குவதன் மூலம் அரசுக்கு மேலதிக வருமானத்தையும் ஈட்டிக் கொள்ள முடியும். அதற்கமைய, குறுகியகால பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக நுவரெலியாவில் அமைந்துள்ள இலங்கை வனவியல் நிறுவனம் மற்றும் இனாமலுவ களநிலைப் பயிற்சி நிலையத்தையும் வெளித்தரப்பினருக்கு வழங்குவதற்காக வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 09. நீரியல் உயிரின வளர்ப்பை மையமாகக் கொண்ட நன்னீர் மீன்பிடி தொழிற்துறையை நிலைபேறான வகையில் அபிவிருத்தி செய்தல்

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள கிராமிய மக்களின் போசாக்கு மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார விருத்திக்கான உறுதிப்பாட்டுக்காக நீரியல் உயிரின வளர்ப்பை மையமாகக் கொண்டு நன்னீர் மீன்பிடி தொழிற்துறையை நிலைபேறான வகையில் அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்திற்காக மூன்று மில்லியன் நிதியுதவியை வழங்குவதற்கு ஜப்பான் அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை அநுராதபுரம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் தெரிவு செய்யப்பட்ட

நீர்த்தேக்கங்களின் நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், நன்னீர் மீன்பிடி தொழிற்துறையை நிலைபேறான வகையில் உறுதிப்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இறக்குமதி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் உபகரணங்களுக்குரிய வரிகளை விடுவிப்பதற்காக கடற்றொழில் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் (OPEC) நிதியத்தின் நிதியுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கருத்திட்டக் காலத்தை நீடித்தல்**

தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டாகும் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டு இருப்பினும், நாட்டில் நிலவிய கொவிட் நிலைமை மற்றும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு இல்லாமல் போயுள்ளது. இதற்கு முன்னரும் குறித்த கருத்திட்டக் காலத்தை 2024.03.30 வரை நீடிப்பதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் ஒரு மாகாணத்திற்கு 04 தொழிநுட்ப ஆய்வுக்கூடங்கள் வீதம் ஒன்பது மாகாணங்களுக்கு 36 தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்களை நிர்மாணிப்பதற்கும், தற்போதுள்ள 15 கட்டிடங்களில் ஆய்வு கூடங்களை மேம்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 65% சதவீதமாகும். தொழிநுட்பவியல் பாடங்கள் தற்போது கற்பிக்கப்பட்டு வரும் 135 பாடசாலைகளுக்கான சிறிய தொழில்நுட்ப அலகுகளை நிர்மாணிப்பதற்கும் மற்றும் பரிமாற்றம் செய்வதற்கும் தேவையான தொழில்நுட்ப கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் மற்றும் ஆசிரியர்களின் இயலளவு விருத்திக்காக கருத்திட்டத்தின் கீழ் எஞ்சுமென எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நிதியை பயன்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்து கருத்திட்டத்தில் எதிர்பார்க்கும் நோக்கங்களை அடைவதற்காக கருத்திட்டக் காலப்பகுதியை மேலும் 2025.03.30 ஆம் திகதி வரை நீடிப்பதற்காக கல்வி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. CHINA LABOUR ENGINEERING COMPANY (LANKA) LIMITED மூலோபாய முக்கியத்துவம் கொண்ட இரண்டாம்நிலை வர்த்தகமாக பெயரிடல்**

தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், பேண்தகு அபிவிருத்தி மற்றும் வதிவிட சமூகத்தவர்களை குடியமர்த்தல் போன்ற நகர வசதிகள் தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற வியாபாரமாக அமையும் CHINA LABOUR ENGINEERING COMPANY (LANKA) LIMITED இனை மூலோபாய முக்கியத்துவம் கொண்ட இரண்டாம் நிலை வர்த்தகமாக பெயரிடுவதற்கு அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய குறித்த வர்த்தகத்தை கொழும்பு துறைமுக நகர பொருளாதார சட்டத்தின் II ஆம் அட்டவணையின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடுவிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளை வழங்குவதற்கும், அதற்கான ஒழுங்குவிதிகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுவதற்கும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. 1991 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தை திருத்தம் செய்தல்**

1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக 2024.01.01 திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய சட்டவரைஞர் அவர்களால் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தச்) சட்டமூலத்திற்கு சட்டமா அதிபர் அவர்களின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற

அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் தொழில்நுட்ப அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. அனைத்து துறைகளிலும் உடலியல் தண்டனைகளை விதிப்பதை தடை செய்வதற்காக தண்டனைச் சட்ட கோவை மற்றும் குற்றவியல் வழக்கு கோவைச் சட்டங்களை திருத்தம் செய்தல்**

இலங்கை ஒரு உறுப்பு நாடாக கையொப்பமிட்டுள்ள சிறுவர் சமவாயத்தின் மூலம், பிள்ளை ஒருவரின் சிவில், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பெற்றோர்களின், சட்ட ரீதியான பாதுகாவலர்களின் அல்லது வேறு நபர்களின் பாதுகாப்பின் கீழுள்ள பிள்ளை ஒருவருக்கு பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட அனைத்துவித உடலியல் அல்லது உளவியல் வன்முறைகளுக்கு இரையாதல், காயப்படுத்தல் அல்லது துஷ்பிரயோகப்படுத்தல், புறக்கணித்தல் அல்லது கவனிக்காது விடல், முறைகேடாகக் கவனித்தல், சுரண்டல்களுக்கு ஆளாக்குதல் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பதற்காக பொருத்தமான அனைத்துச் சட்ட ரீதியான, நிர்வாக ரீதியான கல்வி ரீதியான நடவடிக்கைகள் அரச தரப்பினரால் மேற்கொள்ளப்பட வேண்டுமென சிறுவர் உரிமைகள் தொடர்பான சமுதாயத்தின் 19(1) ஆம் உறுப்புரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.. வீட்டிலும், மாற்றுப் பாதுகாப்பு பின்னணியிலும், தண்டனை கட்டளைகளை நிறைவேற்றுகின்ற நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளில் உடலியல் தண்டனைகளை வழங்குவதற்கு தற்போது காணப்படுகின்ற சட்ட ரீதியான ஏற்பாடுகள் போதுமானளவு இன்மையால், உடலில் தண்டனைகள் உள்ளிட்ட துஷ்பிரயோகங்களுக்கும் வன்முறைகளுக்கும் பிள்ளைகள் அதிகளவில் இரையாகின்ற நிலைமை காணப்படுவதாக சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் குழு இலங்கை தொடர்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளது. அத்துடன், அண்மையில் ஆசிரியர் ஒருவரால் அடித்து தாக்கப்பட்டமையால் செவிப்புலன் இழந்த மாணவர் ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மனுவின் உயர் நீதிமன்ற தீர்ப்பின் மூலம், ஆசிரியர் மற்றும் அரசியலமைப்பின் 11 ஆவது உறுப்புரையின் பிரகாரம் உரிமை மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான உடலியல் தண்டனைகளை வழங்குவது பிள்ளை ஒருவருக்கு உடலியல் மற்றும் உளவியல் ரீதியாக நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்துமென விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் கொடூரமான அல்லது இழிவான உடலியல் மற்றும் உடலியல் அல்லாத தண்டனைகளின் கீழ் எந்தவொரு செயற்பாட்டையும் உள்ளடக்கும் வகையில் சட்டத் திருத்தத்தை துரிதமாக அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. அதற்கமைய அனைத்துத் துறைகளிலும் உடலியல் தண்டனைகள் விதிப்பதை தடை செய்வதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கி தண்டனைச் சட்டக் கோவை மற்றும் குற்றவியல் வழக்கு கோவைச் சட்டங்களை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கௌரவ ஜனாதிபதி மற்றும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**